# சிற்றிலக்கியக் காலத் தமிழர்களின் நிலை

**முனைவர் திருமதி நா.கவிதா,**

**தமிழ்த்துறை உதவிப்பேராசியர்,**

**தி ஸ்டாண்டர்டு பயர் ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி.**

DOI 10.5281/zenodo.12754261.

Abstract :

The literature has fully recorded the extent to which the role and function of the government in the creation of literature has become important and the literature has been created under the control of the government of the respective period. Without explaining the list of small letters, the problems with the number of small letters, the form of small letters, the artistic finesse, without presenting literary questions such as whether they are within the grammatical definition given by Patials, this article presents the concepts of economic exploitation of Tamils and female slavery through the medium of Sitrilakkiyam Pallu, Kuravanchi, Sathagam and Nondi Nataks.

**Key Words : kuravanji Literature** - Sitrilakkiyam - grammatical definition

காலந்தோறும் இலக்கிய உருவாக்கத்தில் அரசின் பங்களிப்பும் செயல்பாடும் எந்த அளவிற்கு முக்கியத்துவம் பெறுகிறது மற்றும் அந்தந்த கால அரசின் கட்டுபாட்டிற்குக் கீழ்தான் இலக்கியங்கள் படைக்கப்படுகின்ற ன என்பதையும் சிற்றிலக்கியங்கள் முழுமையாகப் பதிவு செய்துள்ளன. சிற்றிலக்கியங்கள் குறித்த பட்டியலையோ , சிற்றிலக்கியங்கள் எண்ணிக்கையில் உள்ள சிக்கல்களையோ, சிற்றிலக்கியத்தின் வடிவத்தையோ, கலை நுணுக்கத்தையோ விளக்காமல், பாட்டியல்கள் கூறும் இலக்கண வரையறைக்குட்பட்டு இவை அமைந்துள்ளனவா போன்ற இலக்கியத்தரம் வாய்ந்த கேள்விகளை முன்வைக்காமல் , தமிழர்களின் பொருளாதாரச் சுரண்டல் நிலை, பெண் அடிமைநிலை குறித்த கருத்தாக்கங்களை பள்ளு, குறவஞ்சி, சதகம், நொண்டி நாடகங்கள் ஆகிய சிற்றிலக்கியங்களின் வழி இக்கட்டுரை முன்வைக்கின்றது.

**பொருளாதார ஏற்றத்தாழ்வும் சுரண்டலும்:**

சிற்றிலக்கியங்கள் தோன்றிய காலச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் முதன்மையானது நிலப்பிரபுத்துவத்தின் தோற்றமே ஆகும். இந்நிலப் பிரபுத்துவ வரவினால்



http://Creativecommons.org//license/by/4.0/.

சமுதாயச் சூழலில் மாற்றங்கள் பல ஏற்படலாயின. “நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையில் நிலம் உற்பத்திச் சாதனமாகும். எனவே, அந்த உற்பத்திச் சாதனத்தை நிலத்தை உடையோர்கள் உடையோராகவும், நிலமில்லாத தொழிலாளர்கள் பண்ணை அடிமைகளாகவும் அமைகின்றனர்.”[1] என்று காரல் மார்க்ஸ் கூறும் கூற்று நிலப்பிரபுத்துவம் தன்மையினை இயம்புகின்றது.

ஆக இக்காலகட்டத்தில் உற்பத்தி முறைகள் உற்பத்தி உறவுகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள இயலுகின்றது.

பாளையக்காரர்கள், அமரநாயக்கர்கள், சுபேதார்கள் போன்ற அதிகாரிகள் நிலப்பிரபுத்துவம் தோன்றிய நாயக்கர் காலத்தில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் வரி என்ற பெயரில் மக்களிடமிருந்து விளைச்சலின் பெரும் பகுதியைச் சுரண்டினார்கள். நில விளைச்சலைப் பிரிப்பதிலும் சிக்கல்கள் உண்டாகின. ‘புதுக்கோட்டைப் பகுதியில் பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் நிலப்பிரபுவிற்கும் குடிமக்களுக்குமிடையே விளைச்சல் கீழ்க்கண்ட விகிதத்தில் பிரிக்கப்பட்டது.

“வரகு, திணை முதலியன 1/2 : 1/2
புஞ்சை 4 : 1 ”[2]

இம்முறை நாயக்கர் காலத்தில் மக்கள் மத்தியில் காணப்பட்ட சுரண்டல் நிலையினை முன்னிலைப்படுத்துகின்றது.

சிற்றிலக்கியங்களில் பள்ளுப் பாடல்கள் தம் காலத் தமிழகத்தில் நிலவிய குழப்பமான அரசியல் சூழல், கொடுமையான வரிச்சுரண்டல், பஞ்சம், கொள்ளை நோய், சாதிக் கொடுமை, தீண்டாமை ஆகிய கொடுமைகளுக்கு ஆளான பண்ணை நிலங்களில் உழைத்துக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. மேலும் இந் நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்தில் கல்வி ஒரு சிலருக்கு மட்டுமே என்ற கோட்பாடு, புலனெறி வழக்க கலை இலக்கியம் கூட ஒரு சிலருக்கே என்றும் கோட்பாடுகள் காணப்பட்டன.

நெல் விளைச்சலில் பெரும் பங்கு ஆற்றுகின்ற பள்ளன் தனக்கென தனி நிலம் ஏதும் இல்லா அடிமையாகவே உழல்பவன். பள்ளன், பள்ளியர்கள் உழைப்பால் பெருகிய நெல்


http://Creativecommons.org//license/by/4.0/.

விளைச்சலை, பண்ணைக்காரன் களத்தில் இருந்து மேற்பார்வை செய்து கொண்டிருக்க , பல பிரிவுகளுக்கும் அளந்து கொடுக்கும் முறைமையைக் காண இயலுகின்றது.

'மடத்துக்கு வேண்டுஞ்
செந்நெல் வாரிக்குவிப்பார்
கனக்குஞ் சிறப்பமையக் கட்டியளப்பார்
கங்காணப் படி பண்ணைக்
காரனார் முன்னே" **(முக்கூடற்பள்ளு,செய்யுள் எண்:140)**

உழைப்பவர்கள் உருக்குலையவும், வறுமையில் வாடவும், உழைக்காதவர்கள் உண்டு கொழுத்து ஆதிக்கம் செலுத்துவதுமான நிலையையே நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு கொணர்ந்தது எனலாம். நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தால் நாயக்கர் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மேலும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியதோடு மட்டுமல்லாமல் நிலையிலும் மிகத்தாழ்ந்து போயினர்.

'பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒரு சமூகத்தில் அதன் வெவ்வேறு குழுக்களுக்கிடையே அல்லது தனிநபர்களுக்குகிடையே இருக்கக் கூடிய பொருளாதார நிலையின் சலனமற்ற தன்மையை குறிக்கின்றது. பொருளாதார நிலையை வருமானத்தையும் நிலையான சொத்துக்களையும் கொண்டு வரையறை செய்யலாம் "[3] என்று பொருளாதார ஏற்றத்தாழ்விற்கு வரையறை வழங்குவர். ஒரு சமுதாயத்தில் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் சிறப்பாக அமைவதற்கு ஏற்றத்தாழ்வு குறைவாக இருத்தல் வேண்டும் என்பர்.

பாளையங்கள் செல்வாக்கு பெற்றிருந்த நாயக்கர் காலத்தில் உழுகுடிகளாகிய பள்ளர் , பறையர் போன்ற சாதியினர் பண்ணையார்களால் அடிமையாக நடத்தப்பட்டனர்.அந்த விவசாயத் தொழிலாளர்களின் ஊதியம் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யவில்லை. முக்கூடல் பள்ளுவில் பள்ளன் 'தனக்கென்று உழுவதற்கு ஒருபன்றி உழுந் தரையளவு கூட கிடையாது ," என்று கூறும் இடத்தில் தனிநபரிடையே வழக்கில் இருந்த பொருளாதார ஏற்றத்தாழ்வினைக் காணலாம்.

'பழகினீர் அறிவீரென் சமர்த்துப்
பயிரிடாக் கள்ளப் பள்ளல்ல வேநான்
உழவு தானொரு பன்றி உழுந்தரை


http://Creativecommons.org//license/by/4.0/.

ஒன்றல்லாமல் இரண்டெனக்கில்லை"

((முக்கூடற்பள்ளு,செய்யுள் எண்:68)

என்ற வரிகளால் பயிரிடாமல் சோம்பிக் கிடக்கும் பள்ளன் நானல்ல , எனக்கென்று உழுவதற்கு நிலமும் கிடையாது என்று பள்ளன் கூறுவதைக் காணலாம்.

பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாக உற்பத்திப் பின்னணியில் உருவாகும் சமூகச் சிக்கலே வறுமை எனப்படும். 'வறுமை என்பது மனிதனே உருவாக்கியுள்ள பிரச்சினை. ஏனென்றால் எந்த ஒரு சமூகத்திலும் உற்பத்தியும் , விநியோகமும் நியாயமான முறையில் நடைபெற்றால் தான் அதன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாழ்க்கைக்கு மிகவும் அடிப்படைத் தேவையான பொருட்களையாவது நிச்சயமாக அளிக்க முடியும். ஆனால் உழைப்பின் சுரண்டல் காரணமாக மக்கள் வாழ்க்கையில் வறுமை நிலைத்து நிற்கிறது "[4] அத்தகைய நிலையினை சிற்றிலக்கியங்கள் முற்றிலும் எடுத்துரைக்கின்றன. உழவர்களின் வறுமையினை பள்ளு இலக்கியமும் ; குறவர்கள் பிறரிடம் பொருள் இரக்கும் வறுமையினை குற்றாலக் குறவஞ்சியும் இயம்புகின்றன .

சிற்றிலக்கிய கால கட்டத்தில் சாதாரண மக்களின் வாழ்க்கை பெரும்பான்மையும் வறுமையின் பிடியில் இருந்தமையால் இலக்கியங்களும் வறுமையின் கொடுமையினை வகைப்படுத்திக் கூறுகின்றன. மேலும் வேற்று மொழியினரின் ஆதிக்கம் , அந்நியரின் படையெடுப்பு மீண்டும் மீண்டும் நிகழ்ந்தமையால் , மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்ததோடு மட்டுமல்லாமல், பொருளாதாரமும் நிலைகுலைந்து பஞ்சமே எப்பகுதி மக்களிடமும் காணப்பட்டது. அத்தகைய நிகழ்வுகளை செய்தக்காதி நொண்டி நாடகம் முழுமையாகப் பதிவு செய்துள்ளது.

முகலாயப் பேரரசர் அவ்ரங்குசேபு உத்தரவின்படி துல்பகார்கான் தலைமையில் , தென்னாட்டில் செஞ்சிக்கோட்டையை ஆட்சி செய்த இராமராயரை நோக்கி பெரும் படையானது 1689 ஆம் ஆண்டு வந்தது. வேற்று மொழியுடைய முகலாயச் சேனையின் படை வலிமையால் மக்கள் மத்தியில் பெரும் பயம் உண்டாயிற்று. ஆதலால் மக்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு ஓடிக் காடுகளில் ஒளிந்தார்கள். சொத்துக்களை விட்டுவிட்டு வேற்றூர்களுக்குச் சென்றார்கள். பசியின் மிகுதியினால் துன்பம் பல அடைந்து மடங்களில் தஞ்சம் புகுந்தனர் ; என்பதை சிற்றிலக்கிய ஆசிரியர் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

'அலைந்திடும் பட்சி போலே காட்டினிற்சென்


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

றடைவாரும் பசியினா லிடைவாருந்

தலைவிதியிதுவென வேமடங் களிற்

றரிப்பாருந் தூங்கமுந்தி விரிப்பாரும்"

**(செய்தக்காதி நொண்டி நாடகம்,செய்யுள் எண்: 85)**

என்ற வரிகளால் போர் காரணமாக நிகழ்ந்த மாற்றங்களை அறிய இயலுகின்றது. அந்நியர் படையெடுப்பினால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியினையும், மக்களின் வறுமை நிலையினையும் அறிய முடிகிறது. அதுமட்டுமல்ல அந்த வறுமையினை தங்கள் தலைவிதி என்று ஏற்றுக் கொண்ட மனப்பான்மையும் இங்கே வெளிப்படுகிறது. அந்த ஏற்றத்தாழ்வும், சுரண்டலும் சிற்றிலக்கிய சமுதாயத்தில் மக்களைப் பாதித்த பெரும் **சிக்கல்களாக நிலவின.**

**பெண் அடிமைத்தனம்**

பெண் உயர்த்தப்படுகிற போது சமுதாயம் உயர்வடையும் , பெண் தாழ்த்தப்படுகிற போது சமுதாயம் தாழ்வடையும். இச் சமுதாயத்தில் பால்வகைப் பிரிவு என்பது ஆணாதிக்கச் சமூகம் வகுத்ததே என்று கேட்மில்லட் எடுத்துரைக்கின்றார். அவர் , பெண்ணடிமை குறித்து விளக்குகையில், 'உலகம் முழுவதும் பால் வகை என்பது , ஆண் * பெண்ணை அதிகாரம் செய்யும் பான்மையில் தான் அமைந்துள்ளது. ஆண் தனக்குரிய சமூகக்களமாக இராணுவம் , தொழிற்சாலை, அரசியல், நீதி, தொழில் நுட்பம் , கல்வி போன்றவற்றில் முதன்மைப்படுத்திக் கொண்டான். பெண்ணுக்கு இல்லம் என்பதை உரிமையாக்கி சமூகத்தில் அவள் இயக்கத்தை ஒன்றுமில்லாமல் கட்டுப்படுத்தினான்"[5] என்று எடுத்துரைக்கின்றார்.

சிற்றிலக்கியம் தோன்றிய காலச் சமுதாயத்தில் பெண் அடிமைத்தனத்தை மூவகைகளில் பிரித்துக் கூறலாம். அவை,

1. உரிமை ரீதியிலான அடிமைத்தனம்
2. சிந்தனை ரீதியிலான அடிமைத்தனம்
3. வர்க்க ரீதியிலான அடிமைத்தனம்

ஆகும். பள்ளு இலக்கியங்கள் அக்காலப் பெண்டிர்களின் நிலைகளை எடுத்துரைக்கும் முதன்மை ஆதாரமாக திகழ்கின்றன என்று கூறலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**உரிமை ரீதியிலான அடிமைத்தனம்**

காலங்காலமாய் பெண்ணினம் உரிமை ரீதியிலான அடிமைத்தனத்தின் கீழ் அவதிப்பட்டுக் கொண்டு வருகிறது. ஏனெனில் அதன் அடிமைத்தள வேர்கள் சமுதாயத்தில் மிக ஆழமாக வேரூன்றியுள்ளன. சிற்றிலக்கிய கால கட்டத்திலும் பெண்ணுக்கு இயல்பாக தரப்பட வேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. ஒரு ஆணாதிக்க மேலாண்மையை சமுதாயத்தில் நிலவச் செய்து அதன் கொத்தடிமை நிலையில் பெண்ணினத்தை வைத்திருந்தனர்.

முக்கூடற் பள்ளுவில் இடம்பெறும் வடிவழகக் குடும்பனுக்கு இரு மனைவியர். இதில் மூத்தபள்ளியே முறையாகப் பள்ளனிடம் மாங்கல்யச் சரடு கட்டி மனைவி என்ற உரிமை பெற்றவள். இளையபள்ளியோ, 'பத்திலே பதினொன்றாக இவளையும் வைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று கூறுகின்ற உறவினை உடையவள் ஆவாள். இந்நிலையே சிற்றிலக்கிய கால ஆணாதிக்கச் சமூகத்தை எடுத்துரைக்கின்றது. சமூகத்தில் பள்ளன் மனைவி என்ற உரிமை கிடைக்கப் பெறாமல் வாழும் இளைய பள்ளியிடம் பண்ணைக்காரனும் தனது ஆதிக்க உணர்வினை வெளிப்படுத்துகிறான். குடிசைக்குள் இருக்கும் பள்ளனை வரச்சொல் இல்லாவிட்டால் உன்னை கசையால் அடிப்பேன் என்று சீறுகிறான் பண்ணைக்காரன். பெண்ணை அடிக்கும் ஆணாதிக்க மேலாண்மை நிலையை,

'இசையாத வார்த்தை சொன்னாய்
என்று பண்ணை யானெழுந்து
கசையால் அடிப்பனென்று
கண்சிவந்து கூறினனே" (முக்கூடற்பள்ளு,செய்யுள் எண்: 62)

என்ற பாடலடிகளால் அறியலாம்.

நாட்டை ஆளும் வர்க்கத்தினரும் பலதார மணத்தை அங்கீகாரம் செய்தமையால் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடு நெகிழ்ந்து பெண்ணடிமைத்தனம் ஓங்கி காணப்பட்ட காலமே சிற்றிலக்கிய காலமாகும்.

**சிந்தனை ரீதியிலான அடிமைத்தனம்:**

இந்தியப் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் அவசியமற்ற கட்டுக்கோப்புகளில் சிக்குண்டு வீழ்ந்து விட்ட இந்திய பெண்ணினத்தை சிற்றிலக்கிய காலச் சிந்தனை ரீதியிலான அடிமைத்தனம்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

மேலும் மேலும் தாழ்மைப்படுத்தியது. சிந்தனை அடிமைப்பட்டவர்களுக்கு தாம் அடிமைப்பட்டுள்ளோம் என்கிற உணர்வு கூட இருக்காது. மாறாக தாம் கொண்ட கொள்கைகள் தலை சிறந்தவை என்று எண்ணும் போக்கே உண்டு. அத்தகைய நிலையினையே முக்கூடற்பள்ளுவில் இடம் பெறும் மூத்தபள்ளி பின்பற்றுகிறாள்.

தன்னை ஏமாற்றி மற்றொரு பெண்ணை நாடும் வடிவழகக் குடும்பனை மூத்தபள்ளி குடும்பத்தில் முதன்மை நபரெனப் பேற்றுகிறாள். கணவன் என்கிற உறவு தரும் கலாச்சார உணர்வுச் சிந்தனையில் மூத்தபள்ளி முற்றிலும் மூழ்கிவிடுகிறாள். அதனால் வடிவழகக் குடும்பன் கூறும் ஏமாற்று மொழிகளை ஏற்றுக் கொண்டு இளையபள்ளியிடம் சண்டையிட்டாலும் முடிவில் சமாதானமாக இணைந்து கொள்கிறாள்.

'மக்களாணை என் ஆணை யுன் னாணை நீ
வார்த்த கஞ்சி குடித்துக் கிடப்பேன்" (முக்கூடற்பள்ளு,செய்யுள் எண்:102)

என்று கூறிய வடிவழகக் குடும்பன் சொல்லினை மூத்தபள்ளி ஏற்றுக் கொண்டு ; பண்ணையிடம் தன் கணவனுக்குரிய தண்டனையை நீக்குமாறு வேண்டுகிறாள். இதில் தண்டனை வழங்குமாறு கேட்ட மூத்தபள்ளியே மனம் மாறும் நிலை , நிலையற்ற பெண் சிந்தனையை இயம்புகின்றது.

'கையார கண்ட களவும்
பொறுப்பீரே ஆண்டே - பள்ளன்
காவலைக் கண்ணாலே
பார்க்கப்படாது காண் ஆண்டே" (முக்கூடற்பள்ளு,செய்யுள் எண்:104)

கணவனாகிய பள்ளன் சிறை செய்யப்படுவதைக் கண்ணாலே பார்க்கவும் இயலாது என்ற பாடலடிகள் பழமைச் சிந்தனையில் மூழ்கிய பெண்ணின் அடிமை நிலையினை எடுத்துரைக்கின்றது.

**வர்க்க ரீதியான அடிமைத்தனம்:**

உழைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமபங்கு உள்ள ஒரு சமுதாயமாக உழைப்போர் சமுதாயம் திகழ்ந்தது என்றாலும் நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் நிகழும் கொடுமையான செயல் பண்ணை ஆண்டைகள் பள்ளப் பெண்களை பெண்டாளும் கொடுமையே


http://Creativecommons.org//license/by/4.0/.

ஆகும். இவ் வர்க்கரீதியிலான பெண்ணடிமைத்தனம் பற்றி பள்ளு இலக்கியங்கள் விரிவாகவே எடுத்துரைத்துள்ளன.

'கள்ளி மூத்த பள்ளி மேலே
யுள்ளம் வைப்பாராம்
நன்னி சின்னப்பொன்னி
யிங்கே வாடியென்பாராம்
நெட்டை நாச்சி மகள் பேச்சி
தன்னைச் சீச்சி யென்பாராம்
முன்னும் பின்னும் பார்த்துக்
கீழு மேலும் பார்ப்பாராம்" (எட்டையாபுரப்பள்ளு,செய்யுள் எண்:71)

என்ற பாடலடிகள் அதிகார வர்க்கத்தின் இழிவான சிந்தனையை முன்னிலைப் படுத்திக் கூறுகின்றன. ஆண்களும் , பெண்களும் சமமாகப் பாடுபடுகிற பள்ளர் சமுதாயத்தில் பெண்ணுக்கு மட்டும் ஏற்படும் சிக்கல்களையே மேற்கூறிய கருத்துக்கள் புலப்படுத்துகின்றன என்று கூறலாம்.

**தொகுப்புரை:**

குறுநில மன்னர்களும் , நிலப்பிரபுக்களும் மதாச்சாரியர்களும் பாடிய சிற்றிலக்கியங்களில் ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குரல் கேட்கும் வாய்ப்பில்லை என்றாலும் அந்த காலத்தில் சமூக அநீதிகளை எதிர்த்து குரல் கொடுக்கும் முறைமை இலக்கியங்களில் சில இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை அறிய இயலுகின்றது. இருப்பினும் சமூகத்தில் நிலவிய இப்போக்கை களைவதற்கான வழியைப் பற்றி சிற்றிலக்கியத்தில் எந்தப் பதிவும் இல்லை என்பதையும் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தகையச் சூழலிலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கான இலக்கியங்கள் தோன்றுதலும் , நலித்த பிரிவினரின் எதிர்ப்புக் குரலைப் பதிவு செய்யும் ஒரு சில இலக்கியங்கள் தோன்றியமையும் சிற்றிலக்கிய காலத்தில் அரங்கேறின.

குறிப்புகள்

1. க.ப.அறவாணன்,தமிழர்மேல்நிகழ்ந்தபண்பாட்டுப்படையெடுப்புகள்,ப.174
2.ஜே.கிருஷ்ண மூர்த்தி, சமூகவியல் கோட்பாடுகள், ப.231


http://Creativecommons.org//license/by/4.0/.

3. www.tamil wikipedia.com ,பொருளாதார ஏற்றத்தாழ்வு, கலைக்களஞ்சியம் - விக்கிப்பீடியா, ப.1.

4. நா.வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள், ப.131

5. கதிரவன் களஞ்சியம், பெண்ணடிமைத்தனம் - www.keetru.com , ப.2.


http://Creativecommons.org//license/by/4.0/.